செய்தி வெளியீடு எண்: 10 நாள்: 09.09.2020

**தேனி மாவட்டம்**
**மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம்**
**கண்காணிப்பு குழு தலைவர் ஆகிய தேனி பாராளுமன்ற உறுப்பினர்**
**திரு. ப.ரவீந்திரநாத்குமார் அவர்கள் தலைமையில்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**முன்னிலையில் நடைபெற்றது :**

*********

தேனி மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம், ஒருங்கிணைந்த அலுவலக வளாக கூட்டரங்கில் மாவட்ட விழிப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் இன்று (09.09.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், கண்காணிப்பு குழு தலைவரும், தேனி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ப.ரவீந்திரநாத்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, முன்னோடி வங்கி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சுகாதாரத்துறை, கல்வித்துறை, சமூக நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மின்சாரத்துறை மற்றும் கனிம வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு மத்திய அரசுத் திட்டங்களின் பயன்பாடு, முன்னேற்றம் மற்றும் செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

தேனி மாவட்டத்தில் அனைத்து மத்திய அரசு திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது எனவும், மக்கள் நலனை கருத்தில் கொண்டு அனைத்து துறை அலுவலர்களும் முனைப்போடு செயல்பட வேண்டும் எனவும் கண்காணிப்பு குழு தலைவரான தேனி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும், தேனி மாவட்டத்தில் அனைத்து மக்களின் கோரிக்கைகளையும் முழுமையாக நிறைவேற்ற மத்திய அரசின் சம்பந்தப்பட்ட துறை செயலாளர்களை பரிந்துரைத்து தேவையான நிதி மற்றும் சலுகைகளைப் உடன் பெற்றுத் தருவதாக கண்காணிப்பு குழு தலைவரான தேனி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் உறுதி அளித்தார்.

இக்கூட்டத்தில், கண்காணிப்பு குழு உறுப்பினர்களான கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் சார் ஆட்சியர் செல்வி டி.சிநேகா, இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) ஞ. தாக்ரே சுபம், இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித்தலைவர் க.ப்ரிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் எஸ்.கவிதா, ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள், தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஊராட்சித்தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**